**<u>கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்</u>**
**<u>முன்னிலை: டாக்டர்.த.பிரபுசங்கர், இ.ஆ.ப.,</u>**

**ந.க.அ1/ 19934/2019** **நாள்.16.08.2021.**

பொருள்: பொதுப்பணி – கரூர் மாவட்ட வருவாய் அலகு – கடவூர் வட்டம் – கடவூர் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 21.08.2019 அன்று இறந்துபோன (லேட்) சீ.மேகநாதன் என்பவரின் மனைவி திருமதி. செல்வி என்பவர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கி உத்திரவிடல்.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யு1) துறை, நாள்.23.01.2020.
2) குளித்தலை சார் ஆட்சியர் அவர்களின் கடிதம் எண்.ந.க.அ5/1855/2020, நாள்.01.07.2020.

*************

**<u>உத்திரவு:</u>**

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், கடவூர் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது கடந்த 21.08.2019 அன்று இறந்துபோன (லேட்) சீ.மேகநாதன் என்பவரின் மனைவி திருமதி. செல்வி என்பவரை முதுநிலை வரிசையின் அடிப்படையிலும், தகுதியின் அடிப்படையிலும் இளநிலை வருவாய் ஆய்வளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து கரூர் மாவட்ட வருவாய் அலகில், கரூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

2) தனியர் காலந்தாழ்த்தாது உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார்.

3) இவரின் பணி தமிழ்நாடு அரசு பணியாளர்கள் பொது விதிகள் 10(அ)(i)–ன்படி முற்றிலும் தற்காலிகமானது. தனியரது பணிநியமனத்தை வரன்முறைப்படுத்தி அரசாணை பெறப்பட்ட பின்னரே இவரது பணி வரன்முறை செய்யப்பட்டதாக கருதப்படும்.

4) தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பின்னாளில் தவறானவை என தெரியவந்தாலோ, உண்மைக்குப் புறம்பானவை என கண்டறியப்பட்டாலோ, கல்விச்சான்றுகள் போலியானவை என கண்டறியப்பட்டாலோ மற்றும் வேறு எந்த விதத்திலாவது தவறானவை என கண்டறியப்பட்டாலோ இந்த பணி நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக இரத்து செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

5) தனியரது தகுதியின் அடிப்படையிலும், முதுநிலை வரிசையின் அடிப்படையிலும் வழங்கப்பட்டுள்ள இப்பணி நியமனத்தின் பேரில்செய்யப்படும் மேல்முறையீடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6) தனியர் பணியில் சேரும் போது சிவில்அசிஸ்டன்ட் சர்ஜன் (Civil Assistant Surgeon) பதவிக்கு குறையாத மருத்துவ அலுவலரிடம் உரிய படிவத்தில் பெறப்பட்ட உடல் தகுதி சான்றினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) தனியருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கரூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முன்பு ஆஜராகி பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார். தனியருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலகத் தலைவர் தனியரின் அசல் வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை தனியரிடமிருந்து பெற்று ஒப்படைக்க வேண்டும்.

8) மேலும் பணியில் சேர்ந்ததும் இவரது பணியேற்பு அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு கரூர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

16/8/21

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கரூர்.

(1/5)

16/8/2021

பெறுநர்
திருமதி.செல்வி,
க/பெ.(லேட்) மேகநாதன்,
71, கிழக்குப்பகுதி,
செண்பகமலர் தெரு,
ராம் நகர், PPR ரைஸ்மில் அருகில், – பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்.
P&Tநகர், விரிவாக்கம்,
ஆணையூர் அஞ்சல்,
மதுரை–625017.

<u>நகல்</u>

1. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர்,
   வருவாய் நிர்வாகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–600 005.
2. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், கரூர்.
3. மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), கரூர்.
4. மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர்.
5. மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் உதவியாளர்.
6. அ1/17456/2017 கோப்பிற்கு.
7. அ1 மற்றும் அ3 இருப்புக் கோப்பிற்கு.